III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.229/2022

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 20-08-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : E.Jeevanantham | Village | : |
| Father's / Husband's Name | : Ellappan | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.) சீட்டில் சேர்ந்த நபர் பாஸ்புக்கில் கடைசி பக்கத்தில் குறுக்கு கோடிட்டு கொடுத்துவிட்டால் பேமெண்ட் முடிந்துவிட்டது என்று அர்த்தம். ஒரு சீட்டில் உறுப்பினாராக இருந்தவர் பணத்தை கட்டினாரா இல்லையா என்பதற்கு அவர்களுக்கு இருக்கும் ஒரே ஆதாரம் இது தான் என்றால் சரிதான். சிட்டு போடும்பொழுது வாங்கும் நிரப்பப்படாத காசோலையும் புரோநோட்டும் திருப்பி கொடுக்கும்பொழுது அதற்கு என்ன ஆவணம் எழுதிக்கொடுப்போம் என்றால் நிரப்பப்படாத காசோலையும் புரோநோட்டும் வாங்குவதில்லை. நிரப்பித்தான் வாங்குவோம். அதனை திருப்பி கொடுத்ததற்கு என்ன ஆவணம் கொடுக்கமுடியும்? நான் 12 வரை படித்திருக்கின்றேன். சிட்பண்ட் விதிமுறைகள் எனக்கு தெரியும். சிட்டை நான் முறையாக லைசென்ஸ் எடுத்து நடத்துகின்றேன். லைசென்ஸ் கொடுக்கும்பொழுது சீட்டு பதிவாளர் விதிமுறைகள் அடங்கிய குறிப்பை எனக்கு கொடுப்பார் என்றால் எனக்கு அது ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படுகின்ற பி.வா.த.சா.ஆ.2 பாஸ்புக்கில் கண்டுள்ள விவரங்கள் தனியாக ஒரு பதிவேட்டில் குறித்து வைக்கப்படும் என்றால் சரியல்ல. இந்த விவரங்கள் அடங்கிய பதிவேட்டை பராமரிக்கவில்லை என்றால் என்னுடைய சீட்டு பதிவு அனுமதி ரத்து செய்யப்பட்டுவிடும் என்றால் சரிதான். ஒவ்வொரு சீட்டும் ஆரம்பிக்கும்போது அது பற்றிய விவரங்களை சீட்டு பதிவாளரிடம் சமர்பித்தால் தான் அடுத்த சீட்டிற்கு அனுமதி வழங்கப்படும் என்றால் சரிதான். சீட்டுப் பதிவாளரிடம் சீட்டு உறுப்பினர்களின் எண்ணிக்கை, தொகை செக்யூரிட்யாக வாங்கப்பட்ட ஆவணங்கள்

பற்றிய விவரங்களை சமர்பித்தால் தான் சீட்டுப் பதிவாளரிடம் செக்யூரிட்டியாக வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையை பெற முடியும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுகின்ற பி.வா.த.சா.ஆ.2 ஆவணத்தில் பிரதிவாதி எந்த தேதியில் சீட்டு எடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 14.12.2010 ல் எடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது எவ்வளவு தொகைக்கு எடுத்தார் என்பதும் எவ்வளவு தொகை செலுத்தினார் என்பது அந்த புத்தகத்திலியே குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.த.சா.ஆ.2 பாஸ்புத்தகத்தில் கண்டுள்ள சீட்டுத்தொகை முழுவதையும் பிரதிவாதி கட்டி முடித்துவிட்டார் என்றால் முடித்திருக்கலாம். சீட்டு கட்டி முடித்தவுடன் போடப்படும் குறுக்குகோடுகள் இந்த பாஸ்புத்தகத்தில் போடப்பட்டுள்ளது. இந்த பாஸ்புத்தகத்தில் 11 வது பக்கத்திற்கு பிறகு குறுக்கு கோடு இடப்படவில்லை என்றால் ஆமாம். பிரதிவாதி காலதாமதாமாக பணம் செலுத்தியதால் அவருக்கு பைன் போட்டு அதிப்படியான தொகை அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் penalty என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் அதனை நான் எழுதவில்லை. அதில் penalty என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தொகை ரூ.7,335/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் பி.வா.த.சா.ஆ.5 ஆவணத்திலும் penalty என்று எழுதப்பட்டு ரூ.2,945/- என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிட்பண்ட் விதிப்படி பெனால்டி வாங்குவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.த.சா.ஆ.2 ஆவணத்தின் படி பத்து லட்ச ரூபாய்க்கான சீட்டில் ரூ.3,73,500/- தள்ளுபடி போக ரூ.6,26,500/-க்கு பிரதிவாதி சீட்டை எடுத்துள்ளார் என்றால் சரிதான். அதேபோன்று பி.வா.த.சா.ஆ.4 மற்றும் 6 ஆவணத்தில் சீட்டு எடுத்ததற்கான எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இந்த இரண்டு பி.வா.த.சா.ஆ.4 மற்றும் 6 ஆவணங்களிலும் 4 வது ஆவணத்தில் 13 ஆம் பக்கம் வரையிலும் 6 வது ஆவணத்தில் 1 வது பக்கத்தில் entry போடவில்லை ஆனால் கிராஸ் செய்யப்பட்டுள்ளது. பி.வா.த.சா.ஆ.2 சீட்டிற்கு பைன் போட்டதால் பி.வா.த.சா.ஆ.4 மற்றும் 6 சீட்டுகளை பிரதிவாதி கட்டவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் பிரதிவாதி இந்த இரண்டு சீட்டுகளை எடுக்க நான் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி போட்ட முடிவடைந்த சீட்டுக்களுக்குரிய பிரதிவாதி செலுத்தி வைத்த ஆவணங்களை நான் அவருக்கு திருப்பி கொடுத்ததை காட்ட ஏதாவது ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ஆவணத்தை திருப்பி கொடுத்தது கொடுத்தது தான். அதற்கு ஆவணம் எதுவும் கிடையாது. என்னென்ன சூரிட்டி டாக்குமெண்ட் வாங்கினேன் என்று ஒரு

பதிவேட்டில் எழுதுவேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் சீட்டு பரிவர்த்தனைகளின் போது சூரிட்டிக்காக பெற்ற ஆவணங்களை சீட்டு முடிவடைந்த பிறகும் நான் அவருக்கு திருப்பிக் கொடுக்காமல் அதனை நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி சீட்டு பணத்தை கட்டவில்லை என்றால் அவருக்கு சீட்டு விதிமுறைப்படி அறிவிப்பு அனுப்ப வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி இந்த பிரச்சனைக்கு பிறகு எனக்கு வங்கி மூலமாக பணம் அனுப்பிக்கொண்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய வீட்டில் வருமான வரி சோதனை நடைபெற்றது. (அறிவார்ந்த வாதி தரப்பு வழக்கறிஞர் இந்த கேள்விக்கு ஆட்சேபனை தெரிவித்து பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் எடுக்கப்படாத வாதுரை பற்றி கேள்வி கேட்க முடியாது என்று ஆட்சேபித்தார்). 2010 ல் வருமான வரி சோதனையின் போது சீட்டு சம்மந்தமான ஆவணங்களை எடுத்துச் சென்றார்கள். அவ்வாறு எடுத்துபோன ஆவணங்களின் பட்டியலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் இது நடைபெற்று 15 ஆண்டுகள் ஆகிவிட்டது. TAX கட்டவில்லை என்று வருமான வரித்துறை சொல்லி விசாரணைக்கு பின்பு எனக்கு refund பணம் கொடுத்தார்கள். அந்த வழக்கு 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக முடிவடைந்தது. வருமான வரித்துறையினர் எடுத்துச் சென்ற ஆவணங்களில் பிரதிவாதி சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இருக்கும் என்றாலும் அதனை வேண்டுமென்றே நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இருக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகன் வினோத்ராஜ் சீட்டுகள் 2, 4, 6 க்குரிய தொகையை பற்றி பிரதிவாதியை சந்தித்து பேசி கடைசியாக ஒரு லட்ச ரூபாய் என்று இறுதி செய்தார் என்றால் சரியல்ல.

(அறிவார்ந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).